www.Padasalai.Net www.TrbTnpsc.com

**ஈ.கே.எம்.அ.க மதரஸா இஸ்லாமியா உ.பள்ளி**
**பத்தாம் வகுப்பு : தமிழ் : குறு வினாத் தேர்வு**
**காலம்:1.30 மணி மதிப்பெண்:150**
**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

1. மன்னும் சிலம்பே மணிமேகலை வடிவே
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே
-இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெரும் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

2. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பலதாரு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
– மேற்கண்ட தொடர்களைச் சுட்டிக்காட்டி பிழையான தொடரில் உள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

3.சம்பா நெல் வகைகளை எழுதுக.

4.கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.

5.உலகத் தமிழ் மாநாடு குறித்து அப்பாதுரையார் கூறுவன யாவை?

6.தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

7.ஐம்பெரும் காப்பியங்கள் யாவை?

8.இரட்டுறமொழிதல் என்றால் என்ன?

9.வேங்கை என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

10.உண்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ். – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

11.மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

12.பொது மொழி என்றால் என்ன? சான்று தருக.

13. நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் -மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம் -இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்கள் எழுதுக.

14.நாற்றிசையை எழுதி ,அதன் வேறு பெயர்களையும் குறிப்பிடுக.

15.காற்றைக் குறிக்கக்கூடிய வேறு சொற்களை எழுதுக.

16.வாடைக்காற்று – தென்றல் காற்று குறித்து எழுதுக.

17.கொண்டல் காற்று என்றால் என்ன?

18.வசன கவிதை குறிப்பு வரைக

19.பெற்றோர் வேலையில் இருந்து திரும்ப தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

20.மாஅல் – பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

21.விருச்சி கேட்டல் என்றால் என்ன?

22.விருந்தினரை மகிழ்வித்து கூறும் முகமன் சொற்களை எழுதுக.

23."தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த திணையை உரலில் இட்டு ஒற்றி எடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தார் தலைவி "என்பது இலக்கியச் செய்தி விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

24.முகமன் வழங்கல் என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது?

25.இறடி பொம்மல் பெறுகுவிர் -தொடர் உணர்த்தும் பொருள் எழுதுக.

26."எழுது என்றாள்" என்பது விரைவு காரணமாக "எழுது எழுது என்றாள்" என அடுக்குத்தொடரானது . அப்படியானால் "சிரித்துப் பேசினார்" என்பது எவ்வாறு அடுக்குத்தொடர் ஆகும்?

27.பாரதியார் கவிஞர் – நூலகம் சென்றார் – அவர் யார் ? ஆகிய தொடர்களில் எழுவாய் உடன் தொடரும் பயனிலைகள் யாவை?

28."நச்சப் படாதவன் செல்வம் "இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்கான பொருள் தருக.

29.கொடுப்பதூஉம் துய்ப்பாஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடியுண் டாயினும் இல். – இக் குறளில் வரும் அளபெடையை எடுத்து எழுதுக.

30.வருங்காலத்தில் தேவையென கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

31.மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

32.உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவை என பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

33. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழி செல்கிறேன் . இத்தொடர் காலவழுவமைதி எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

34."சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்பான் புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்ற இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயை பற்றிப் பெருமையாகக் கூறினார்இ – இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.

35.இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் யார்?இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் யார்?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

36.இயற்றிய நூலைத் தானே மொழிபெயர்த்து அதனால் சிறப்பு அடைந்தவர் யார் ?அவர் பெற்ற சிறப்பு யாது?
37.செய்கு தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத்தொடர்கள் ஆக்குக.
38.சதாவதானம் என்றால் என்ன?
39.செய்குத்தம்பி பாவலர் 'சதாவதானி 'எனப் போற்றப்பட காரணம் யாது?
40.கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு
முழுது உணர்ந்து கபிலன் தன் பால்
பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான்
இடைக்காட்டுப் புலவன் தென் சொல்
- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்
41.இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது. இதோ இருக்கிறது . சொடுக்கி போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே ?மின்சாரம் இருக்கிறதா? இல்லையா? - மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்து எழுதுக.
42."கலைஞர்,பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" -பேராசிரியர் அன்பழகனார்.-இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.
43.கலைஞர் என்ற சிறப்புப்பெயர் கொடுத்த நாடகம் எது?
44. "சாந்தமான தொரு பிரபஞ்சத்தை சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்" இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.
45.உறங்குகின்ற கும்பகன்ன எழுந்திராய்
எழுந்திராய் காலத்து கையிலே உறங்குவாய்
உறங்குவாய்
- கும்பகர்ணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்க சொல்கிறார்கள்?
46.காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உள்ள சுவை மிகுந்து இருக்கும். இத் தொடரில் அமைந்துள்ள முதற்பொருள் கருப்பொருள் எழுதுக.
47.கீழ் வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருள்களை திருத்தி எழுதுக.
உழவர்கள் மழையில் உழுதனர். முல்லை பூச்செடியை பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
48."சுரப்பிடும்பை இல்லார் " இத்தொடரின் பொருள் கூறுக.
49.வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவர் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்து குறளின் கருத்து யாது?
50.பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார் ஏன் என்பதை எழுதுக.
பெரிய கத்தி - இரும்பு ஈட்டி- உழைத்ததால் கிடைத்த ஊதியம் - வில்லும் அம்பும்
51.வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் மா.பொ.சி என்பதற்குச் சான்றுகள் தருக.
52.மார்ஷல் நேசமணி என்பவர் யார்?
53.தமிழர் பண்பாட்டின் மகுடம் எது?
54.மெய்க்கீர்த்தி பாடப்படுவது நோக்கம் யாது?
55. பாசவர் - வாசவர்- பல்நிண வினைஞர் - உமணர் அதிகாரம் காட்டும் இவ் வணிகர்கள் யாவர்?
56.குறிப்பு வரைக. " அவையம் "
57.காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
58.குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.
59.வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கலோசை ஆகும். துள்ளலோசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடரை ஒரே தொடராக இணைத்து எழுதுக
60.நால்வகை பாக்களுக்கு உரிய ஓசைகளை எழுதுக.
61.நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு இத்தொடரை இரு தொடர்களாக்குக.
62.வாழ்வில் தலைக்கனம் - தலைக்கனமே வாழ்வு என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்து கூறுகிறார்?
63.காய்மணி யாகும் முன்னர்
64.காய்ந்தென காய்ந்தேன் - உவமை உணர்த்தும் கருத்து யாது?
65.தீவக அணியின் வகைகள் யாவை?
66.அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
67.பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ - வினவுவது ஏன்?
68.இஸ்மத் சன்னியாசி என்று குறிப்பிடப்படுபவர் யார்?காரணம் தருக.
69.செயற்கை நுண்ணறிவு சாதனங்கள் பெயர்களைக் குறிப்பிடுக.
70.இலா மென்பொருள் பற்றிக் குறிப்பிடுக.
71. தண்ணீர் குடி- தயிர் குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
72.உணவு,விருந்து குறித்த பழமொழி இரண்டு எழுதுக.
73.வாடிக்கையாளர் சேவை செய்யும்,பாரத ஸ்டேட் வங்கி உருவாக்கிய மென்பொருள் எது?
74.உயர்திணைக்கு உரிய பால்கள் எவை?
75.தமிழ்ச்செம்மொழி மாநாடு எங்கு?எப்போது?யாரால் நடத்தப்பட்டது?